## 44

# "யூதத்துவப் பிரச்சனை"

## (9:1-13)

*இந்தப் பாடத்திலிருந்து, நாம் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் இரண்டாம் பாதிக்கான நமது பாடத்தைத் தொடங்குகிறோம். இப்புத்தகம் பற்றிய நமது வரைகுறிப்பில், முதல் எட்டு அதிகாரங்கள் "உபதேச" பகுதி என்றும் கடைசி எட்டு அதிகாரங்கள் "செயல்முறை" பகுதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. செயல்முறைப் பகுதியானது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: "விளக்கம்" (அதிகாரம் 9-11) மற்றும் "நடைமுறைப்படுத்துதல்" (12ம் அதிகாரம் தொடங்கி). (இந்தப் பாடத்தின் முடிவிலுள்ள "ரோமருக்கு எழுதிய நிருபத் திற்கான ஒரு வரைகுறிப்பு" என்பதில் காணவும்.) நமது படிப்புத் தொடரில் அடுத்த பல பாடங்கள், "விளக்கம்" என்ற பகுதியை மையங்கொண்டிருக்கும். "யூதத்துவப் பிரச்சனை"[1] என்று ஜிம் மெக்கைகன் என்பவர் அழைத்த பவுலின் விளக்கத்தை நாம் காண்போம்: விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற உபதேசமானது, சீனாய் மலையில் தேவன் யூதர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையுடன் எவ்வாறு உறவுபடுகிறது.*

*9 முதல் 11 வரையுள்ள அதிகாரங்களில் சில பகுதிகள் புரிந்துகொள்ளச் சுலபமானவைகளாக இருப்பதில்லை. டாம் ரைட் என்பவர், "ஒரு முள்ளம் பன்றி, முட்களால் நிறைந்துள்ளது போலவே, ரோமர் 9-11 பகுதியானது பிரச்சனை களால் நிறைந்துள்ளது" என்று கூறினார்.[2] D. மார்ட்டின் லாயிட்-ஜோன்ஸ் என்பவர், "இதைப் பலர் மோசமான பணி என்று விட்டுவிட்டு, ரோமருக்கு எழுதிய நிருபமானது தொடக்கத்தில் 'சுவிசேஷம்' பற்றிய எட்டு அதிகாரங் களும், கடைசியில் 'நடைமுறைப்படுத்துதல்' என்ற நான்கு அதிகாரங்களும், நடுவில் புதிரின் மூன்று அதிகாரங்களும் கொண்டுள்ளன என்று கூறி முடித்து விடுகின்றனர்."[3]*

*இந்த அதிகாரங்கள் ஏன் இவ்வளவு கடினமாக உள்ளன? பலகாரணங்கள் தரப்படலாம். முதலாவது, இவைகள் முதல் நூற்றாண்டுப் பிரச்சனை ஒன்றை, நாம் இனியும் எதிர்கொள்ளாத பிரச்சனை ஒன்றைக் கையாளுகின்றன. இரண்டாவது, இந்தப் பிரச்சனையை நீங்களும் நானும் அணுகுவதுபோல் பவுல் அணுகவில்லை. பெரும்பாலான வேளைகளில், அவர் தமது அணுகுமுறையைத் தமது சகயூதர்களின் மனநிலைக்கு ஏற்றவகையில் அமைத்தார்.*

*தவறைப் போதிப்பதற்கு இந்தப் பகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இது ஒரு குழப்பமான பகுதியாக இருப்பதற்கு இன்னொரு காரணமாகும். பல ஆண்டுகளாக, இது முன்னறிதல், முன்குறித்தல், மற்றும் தேர்ந்துகொள்ளப்படுதல் ஆகியவற்றிற்குக் கால்வினீயர்களுக்கு மிகவும் பிரியமான ஆதாரமூலமாக இருந்துள்ளது. பின்பு, சமீபத்திய காலங்களில், இந்த அதிகாரங்கள், ஆயிர மாண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களால், அவர்களின் "உலக முடிவு"*

காட்சியின் பாகமாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. ரோமர் 11:26ல் உள்ள பின்வரும் வார்த்தைகள் அவர்களுக்கு விசேஷித்த ஆர்வமுள்ளவைகளாக இருக்கின்றன: ''இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.'' உலகத்தின் முடிவுக்கு அண்மையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில், எல்லா யூதர் களும் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்வார்கள் என்பதாக அவர்கள் போதிக்கின்றனர்.

கடைசியாக, இந்த அதிகாரங்கள் முதல் நூற்றாண்டின் பிரச்சனை ஒன்றைப் பற்றியே முதன்மையாக அக்கறை கொண்டிருப்பதால், இவை நமக்கு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட முடியும் என்று காண்பதென்பது எப்போதுமே சுலப மாக இருப்பதில்லை, எனவே இது ஒரு அறைகூவல் விடுக்கும் பகுதியாக உள்ளது. (பவுலினால் ரோமர் 8ஐத் தொடர்ந்து 12ஐ அளிக்க முடிந்திருக்கும் மற்றும் நாம் 9 முதல் 11 வரையிலான பகுதியை ஒருக்காலும் தவறவிட்டவர்களாக இருந்திருக்க மாட்டோம் என்று கூறப்படுவதுண்டு.) இருந்தபோதிலும், ரோமர் 9-11ஐக் கர்த்தர் காத்து வைத்திருப்பதால், பவுலின் செய்தியானது கிறிஸ்தவ யுகம் முழுவதற்குமானதாக இருக்க வேண்டும். இவ்வதிகாரங்களை நாம் படிக்கையில், *நாம்* கற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகத் தேவன் விரும்புவது என்ன என்பதைக் கண்டறிதல் என்பது நமது அறைகூவல்களில் ஒன்றாக உள்ளது.

இந்தப் பாடமானது முதலில் வசனப்பகுதியைக் கலந்துரையாடிய பின்பு இவ்வசனங்களில் பதியப்பட்டுள்ள காலங்கடந்த சத்தியங்களை நோக்கிக் கவனத்தை அழைப்போம். இந்தப் பாடமானது 9ம் அதிகாரத்தின் முதல் 13 வசனங்களை விளக்கியுரைத்து முடிக்கும் மற்றும் இது ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றிய நமது படிப்பில் இந்தப் புதிய படிநிலைக்கு ஒரு அறிமுக மாகச் செயல்படும்.

## மனதில் ஆழப் பதியவைக்கும் வசனப்பகுதி (9:1-13)

**பவுலின் துக்கம் (வசனங்கள் 1-5)**

ஆவியானவருடைய வழிநடத்துதலின்கீழ், பவுல் 9ம் அதிகாரத்தைத் தமது சகயூதர்களுக்கு வசீகரமாக இருக்கும்படி, கவனத்துடன் வடிவமைத் தார். அவர்கள்மீதான அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்து வதைக்கொண்டு [இந்த அதிகாரத்தை] அவர் தொடங்கினார். எட்டு அதிகாரங்கள் வரையில், பவுல் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள் ளுதல் மற்றும் விருத்தசேதனம் ஆகியவற்றின் மூலமாக மக்கள் நீதிமான் களாக்கப்படுவதில்லை என்று கூறியிருந்தார். அவர் தமது சொந்த மக்களைக் காட்டிக்கொடுப்பவர் என்று தாம் அடையாளப் பெயரிடலாம் என்பதை உணர்ந்தறிந்தார், ஆனால் அந்தக் குற்றச்சாட்டு உண்மை யானதல்ல. புறஜாதிகளுக்கு ஊழியம் செய்தல் என்பதே பவுலுக்குத் தேவனால் தரப்பட்ட ஊழியமாயிருந்தது என்றாலும் (காண்க ரோமர் 11:13; நடபடிகள் 9:15; கலாத்தியர் 2:9), அவர் தமது சக நாட்டவர்களைப் பற்றி மிகவும் கவலை யாக இருந்தார். அவர் ஒரு புதிய இடத்திற்குச் சென்றபோது, அங்கு புறஜாதி களுக்குப் பிரசங்கிப்பதற்கு முன்னர் அங்கிருந்த யூதர்களுடன் முதலில் சுவிசே ஷத்தைப் பகிர்ந்துகொண்டார் (காண்க நடபடிகள் 13:14, 46). ரோமருக்கு

எழுதிய நிருபத்தின் ஆய்வுக்கருத்துக் கூற்றில், அவர் சுவிசேஷம் "முன்பு[முதலில்] யூதருக்கு" உரியதாக இருந்தது என்று கூறினார் (1:16). இவ்விடத்தில், அவர் பின்வருமாறு கூறினார்,

> எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச் சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது. மாம்சத்தின்படி என் இனத்தா ராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப் பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே (9:1-3).

இந்தக் கூற்று, பவுல் கூறவிருந்த விஷயம் உண்மை என்ற ஒரு பலத்த உறுதிப் பாட்டைக் கொண்டுள்ளது: "நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச்[4] சாட்சியாயிருக்கிறது" (வசனம் 2). "கிறிஸ்துவுக்குள்" மற்றும் "பரிசுத்த ஆவிக்குள்" என்ற சொற்றொடர்கள், பவுல் தேவத்துவத்தின் இவ்விரு நபர்களின் பிரசன்னத்தில் தாம் நின்றுகொண்டிருந்ததை உணர்ந்தறிந்தார் என்பதையும் தாம் சத்தியத்தைப் பேசத் தவறினால் அவர்களுக்குப் பதில்கூறியாக வேண்டும் என்பதையும் காண்பிக்கின்றன.[5]

இங்கு பவுல் அறிவிக்க விரும்பிய சத்தியம் ஒன்றுள்ளது: "எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது" (வசனம் 1). இந்தப் பயங்கரமான கவலையை அவருக்குள் நிரப்பியது எது? தொடர்ந்து வரும் கலந்துரையாடலானது, அவரது சக யூதர்களில் பெரும்பான்மையான வர்கள், இயேசுவே மேசியா என்பதைப் புறக்கணித்து அதனால் இழந்து போகப்பட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. 10ம் அதிகாரத்தில் அவர், "இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும்" என்பதே தமது "இருத யத்தின் விருப்பமும் ... தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது" என்று கூறினார் (வசனம் 1).

பவுலின் அக்கறை எவ்வளவு பெரியதாக இருந்தது? 3ம் வசனத்தில் திகைக்கச் செய்யும் அவரது கூற்றைக் கவனியுங்கள்: "மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே." "சபிக்கப்படுதல்" என்பது *anathema* என்பதி லிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "பவுல் சாபம் என்ற பாடக்கருத்திற் கான சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். ... தேவனுடைய சட்டப்படியான கோபத்திற்குக் கையளிக்கப்படுதல் என்பதே கருத்தாக உள்ளது. ..."[6] *Anathema* என்ற வார்த்தையைப் பற்றி, டக்ளஸ் J. மூ என்பவர், "புதிய ஏற்பாட்டில், இது தேவனுடைய மக்கள்கூட்டத்திலிருந்து விலக்கப்பட்டு நிர்மூலமாகுதல் என்ற தண்டனையின் கீழுள்ள ஒரு நபரைக் குறிப்பிடுகிறது (காண்க 1 கொரிந்தியர் 12:3; 16:22; கலாத்தியர் 1:8-9)"[7] என்று குறிப்பிட்டார்.

பவுல் தமது சக யூதர்களுக்குப் பதிலாகச் சபிக்கப்பட்டிருத்தல் என்பது சாத்திய மானதாக இருக்க*வில்லை*. 14ம் அதிகாரத்தில் அவர், "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்கு கணக்கொப்புவிப்பான்" என்று கூறினார் (வசனம் 12). சாத்தியமா*னால்* மற்றும் அது தேவனுடைய சித்தத்தின்

படியானதானால், அவர் தமது யூத சகோதரர்களை இரட்சிக்க எவ்வளவு தூரம் செல்லத் தயாராக இருந்தார் என்பதைப் பற்றியே பவுல் கூறினார். கவலை பற்றிய அவரது சொல்விளக்கம் நமக்கு, இஸ்ரவேல் மக்கள் பொன் கன்றுக்குட்டியை உண்டாக்கிக்கொண்டு தேவனுடைய கோபத்தைத் தூண்டிவிட்டிருந்த பின்பு, அவர்களுக்காக மோசே செய்த வேண்டுகோளை நினைவூட்டுகிறது:[8] "ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்!" (யாத்திராகமம் 32:31, 32).[9] செயல்விளைவில் மோசே, "நீர் எனது சக இஸ்ரவேலர்களை ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளாக்கினால், *என்னையும்* ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளாக்கும்" என்று ஜெபித்தார், பவுல் தமது சக யூதர்களுக்குப் *பதிலாகத் தம்மை* ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளாக்கும்படி ஜெபித்தார். இவ்விரு விஷயங் களிலும், வலிவார்ந்த அக்கறை மற்றும் ஊக்கமான அன்பு ஆகியவற்றின் சொல் விளக்கங்களை நாம் காண்கிறோம்.

ரோமர் 9:3ல் உள்ள பின்வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "மாம்சத்தின் படி என் இனத்தாராகிய என் சகோதரர்." சட்டப்படிப், பவுல் "சகோதரர்" என்ற சொற்றொடரை, சக கிறிஸ்தவர்களைக் குறிக்க மாத்திரம் பயன்படுத்தினார் (எடுத்துக்காட்டாக, காண்க 1:13; 12:1; 15:30); ஆனால் இவ்விடத்தில் அவர் இச்சொற்றொடரை, தமது சக யூதர்களுக்குப் பயன்படுத்தினார். அவர் தமது "சொந்த மாம்சமும் இரத்தமுமாக" (9:2) இருந்த தமது சகயூதர்களுடன் தமக்கிருந்த பிணைப்பை வலியுறுத்த விரும்பினார். ஆவிக்குரிய வகையில், அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தார்; ஆனால் மக்களினத்தைப் பொறுத்த வரையில், அவர் இன்னமும் ஒரு யூதராகவே இருந்தார். (நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறேன், ஆனால் அது நான் ரோப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவனாகவும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடிமகனாகவும் இருக்கிறேன் என்ற உண்மையை மாற்றுவதில்லை.)

யூத மக்களினத்தின்மீது தேவன் பொழிந்திருந்த ஆசீர்வாதங்களின் தொகுப் புரையுடன், பவுல் தமது "சகோதரர்" என்ற குறிப்புரையை "மாம்சத்தின்படியான தமது உறவினர்களுக்கு" பின் தொடர்ந்தார். முன்னதாக அவர், "இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன?" என்று கேட்டிருந்தார் (3:1அ). அவர் தமது சொந்தக் கேள்விக்கு, "அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது" என்று கூறியதன் மூலம் பதில் அளித்திருந்தார் (வசனம் 2). இப்போது அவர் பட்டியலை விரிவாக்கி னார். 9:4, 5ல் அவரது பட்டியல் வரிசையானது, யூதர்கள்மீது தேவன் பொழிந் திருந்த ஒன்பது ஆசீர்வாதங்களைக் கொண்டுள்ளது:

> அவர்கள் இஸ்ரவேலரே; புத்திரசுவிகாரமும், மகிமையும், உடன்படிக்கை களும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே; பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம் சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென்.

(1) *"இஸ்ரவேலர்."* முதலில் பவுல், "அவர்கள் இஸ்ரவேலரே" என்று

கூறினார். யாக்கோபு ஒரு தூதருடன் போராடியபின்பு, அவரது பெயர் "இஸ்ரவேல்" என்று மாற்றப்பட்டது (ஆதியாகமம் 32:28), இது "தேவன் போராடுகிறார்" அல்லது "தேவனோடு போராடுகிறவர்" என அர்த்தப்படுகிறது.[10] "இஸ்ரவேலர்" என்ற சொற்றொடர் இஸ்ரவேல்/யாக்கோபு என்பவரின் சந்ததியைக் குறித்தது மற்றும் யூதர்களுக்கு இது விசேஷித்த தனிச்சிறப்பு உடையதாக இருந்தது. "ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்திலும் பின்பு [புதிய ஏற்பாட்டின்] காலங்களிலும், பாலஸ்தீனிய யூதர்கள் இந்தப் பட்டப் பெயரைத் தாங்கள் தேவனாலே தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாக இருந்தனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கப் பயன்படுத்தினர்."[11] (ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முதல் எட்டு அதிகாரங்களில், பவுல் "யூதன்" மற்றும் "யூதர்" என்ற சொற்றொடர்களைப் பொதுவாகப் பயன்படுத்தினார்; ஆனால் 9 முதல் 11 வரையுள்ள அதிகாரங்களில், அவர் "இஸ்ரவேல்" மற்றும் "இஸ்ரவேலர்" என்பவற்றை முதன்மையாகப் பயன்படுத்தினார்.)

*(2) "புத்திரசுவிகாரம்."* பின்பு பவுல், "புத்திரசுவிகாரமும் ... அவர்களுடையவைகளே" என்று கூறினார். "புத்திரசுவிகாரம்" என்ற வார்த்தை, தேவன் இஸ்ரவேல் மக்களினத்தைத் தமது மகன்களாகவும் மகள்களாகவும் இருக்கும்படிக்குத் *தேர்ந்துகொண்டிருந்தார்* என்பதை வலியுறுத்துகின்றன (காண்க யாத்திராகமம் 4:22; ஓசியா 11:1).[12] அவர் எகிப்து, பாபிலோன் அல்லது அசீரியா போன்ற பலத்த மக்களினத்தைத் தேர்ந்துகொண்டிருக்கவில்லை, ஆனால் சிறிய இஸ்ரவேல் மக்களினத்தையே தேர்ந்துகொண்டார். இஸ்ரவேல் மக்களிடத்தில் அவர், "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்" என்று கூறினார் (ஆமோஸ் 3:2அ).

*(3) "மகிமை."* அடுத்ததாகப் பவுல் "மகிமை" என்பதைப் பட்டியலிட்டார். இது தேவன் இஸ்ரவேல் மக்களினத்தைத் தமது விசேஷித்த மக்களாயிருக்கும்படித் தேர்ந்துகொண்டபோது அவர்கள்மீது பொழிந்திருந்த மகிமையை அர்த்தப் படுத்தக்கூடும். பெரும்பாலும், இது தேவன் தமது மக்களின் மத்தியில் பிரசன்னமாயிருத்தலின் மகிமையைக் குறிப்பிடுகிறது. *Shekinah* என்பது இதற்கான எபிரெயச் சொற்றொடராக உள்ளது. தேவனுடைய மகிமை இஸ்ரவேல் மக்களை வனாந்தரத்தில் வழிநடத்திய மேகஸ்தம்பத்திலும் அக்கினிஸ்தம்பத்திலும் வெளிப்படுத்தப்பட்டது (காண்க யாத்திராகமம் 13:21). ஆசரிப்புக் கூடாரம் உண்டாக்கப்பட்டபோது, அந்தக் கட்டமைப்பைக் கர்த்தருடைய மகிமை நிரப்பிற்று (யாத்திராகமம் 40:34), மற்றும் தேவாலயம் கட்டிமுடிக்கப் பட்டபோதும் அதே விஷயம் நடைபெற்றது (1 இராஜாக்கள் 8:10, 11). இஸ்ரவேலர் மாத்திரமே இவ்வாறு கனப்படுத்தப்பட்டிருந்தனர்.

*(4) "உடன்படிக்கைகள்."* நான்காவது விஷயமாக இருப்பது "உடன்படிக்கைகள்"[13] ஆகும். அவர்களின் மூதாதையரான ஆபிரகாமுடன் தேவன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தார் (ஆதியாகமம் 17:1-8; காண்க 12:1-3; 22:18) மற்றும் சீனாய் மலையில் ஒரு மக்களினம் என்ற வகையில் யூதர்களுடன் அவர் இன்னொரு உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தார் (யாத்திராகமம் 24:8; காண்க 20:1-17). தாவீது அரசருடன் ஏற்படுத்தியிருந்தது (2 சாமுவேல் 23:5; காண்க 7:12) உட்பட மற்ற உடன்படிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இந்த உடன்படிக்கைகள் யாவையும் இஸ்ரவேல் மக்களினத்தை மட்டும் உள்ளடக்கியிருந்தன.

(5) *"நியாயப்பிரமாணம்."* பின்பு பவுல், "நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது" பற்றிக் குறிப்பிட்டார். ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, பவுல் தேவனுடைய வாக்கியங்களை (வெளிப்படுத்துதலை), யூதர்கள் பெற்றுக்கொண்டிருந்த மாபெரும் அனுகூலம் என்று கருதினார் (3:1, 2). யூதர்களைத்தவிர வேறெவரும் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை *எழுத்தில்* பெற்றிருந்ததில்லை. இருப்பினும், 9ம் அதிகாரத்தில் பவுலின் பட்டியலில் அவர், "நியாயப்பிரமாணம் *கொடுக்கப்பட்டதையும்"* உள்ளடக்கியிருந்தார். "இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று'' மற்றும் ''கர்த்தர் சீனாய்மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது" (யாத்திராகமம் 19:16, 18) என்ற காட்சியை மக்கள் கண்டதை உங்கள் சிந்தையில் சித்தரித்துப் பாருங்கள். இதைக் காட்டிலும் காட்சிவளம் மிகுந்த மற்றும் மனதை ஈர்க்கக்கூடிய காட்சியைக் கற்பனை செய்தல் என்பது கடினமாயிருக்கும் - மற்றும் இது இஸ்ரவேலருக்கு மாத்திரம் உரியதாக இருந்தது.

(6) *''ஆராதனை.''* பவுல், யூதர்களுக்குக் கிடைத்திருந்த ஆசீர்வாதங்கள் பற்றிய தமது பட்டியலில் "தேவாலய ஆராதனை ஊழியத்தை'' உள்ளடக்கியிருந்தார். இவ்விடத்தில் "தேவாலய'' என்பது சாய்வெழுத்துக்களில் உள்ளது, இது இவ்வார்த்தை மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டதைச் சுட்டிக் காண்பிக்கிறது; ஆனால் "ஆராதனை'' என்று மொழிபெயர்க்கப்பட்ட *latreia* என்ற வார்த்தை தேவனை ஆராதித்தல் உட்பட, அவருக்குச் செய்யப்படும் ஊழியத்தைக் குறிக்கிறது.[14] இவ்விடத்தில் தேவன்தாமே அவரிடத்தில் சென்று சேரும் வழியைச் சாத்தியமாக்கியிருந்தார் என்ற விஷயத்தின்மீது வலியுறுத்தம் உள்ளது. இஸ்ரவேல் மக்களுக்குக் கர்த்தர், ஆசரிப்புக்கூடாரத்திலும் பின்பு தேவாலயத்திலும் தம்மை எவ்வாறு அணுகுவது என்பதற்குக் குறிப்பான விவரங்களைக் கொடுத்திருந்தார். இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரமே தேவனை எவ்வாறு தொடர்புகொள்வது - அவரது ஆசீர்வாதங்களைக் கேட்பது மற்றும் அவரது இரக்கங்களைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு - என்று கூறப்பட்டிருந்தது.

(7) *"வாக்குத்தத்தங்கள்."* 4ம் வசனம் "வாக்குத்தத்தங்கள்'' என்ற சொற்றொடருடன் முடிகிறது. பழைய ஏற்பாடு, தேவனுடைய மக்களுக்கு வாக்குத்தத்தங்களைக் கொண்டு பொதியப்பட்டுள்ளது, ஆனால் வரவிருந்த மேசியா பற்றிய வாக்குத்தத்தங்களே மாபெரும் முக்கியத்துவம் உடையவைகளாக உள்ளன. இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரமே இந்த வாக்குத்தத்தங்கள் தரப்பட்டிருந்தன.

(8) *"பிதாக்கள்."* 5ம் வசனம் எட்டாவது ஆசீர்வாதத்துடன் தொடங்குகிறது: "பிதாக்கள் [*pateres*] அவர்களுடையவர்களே." NIV வேதாகமத்தில் ''Theirs are the patriarchs'' என்றுள்ளது. ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு ஆகியோர் தொடக்ககாலப் பிதாக்களாக/குல முதுவர்களாக இருந்தனர்; ஆனால் அந்தப் பட்டியலில் யூதர்கள், பழைய ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்த மோசே, தாவீது போன்ற பிறரையும் உள்ளடக்கினர். யூதர்கள் தங்கள் குலமரபு குறித்து நியாயமான வகையிலேயே பெருமைபாராட்டினர்.

(9) *"கிறிஸ்து."* 5ம் வசனத்தின் பிற்பகுதியில், இஸ்ரவேல் மக்களின் கடைசி

யான (மற்றும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த) அனுகூலம் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது: “மாம்சத்தின்படி கிறிஸ்துவும் [மேசியாவும்] அவர்களில் பிறந்தாரே. …” தேவன் ஒரு மக்களினத்தைத் தனியே பிரித்ததற்கு அந்த மக்களினத்தின் மூலமாக மேசியா (கிறிஸ்து) வரவேண்டும் என்பதே அவருடைய முதன்மை யான நோக்கமாக இருந்தது. இது இஸ்ரவேல் மக்களின் தனிச்சிறப்பிற்கான மாபெரும் அடையாளமாக இருந்தது; வேறு எந்த மக்களினமும் இவ்வாறு கனப்படுத்தப்பட்டிருந்ததில்லை.

இயேசுவின் மாம்ச (மனித) பிரகாரமான பகுதியானது அவரது யூதத்துவ குலமரபிலிருந்து வந்தது (காண்க ரோமர் 1:2-4; மத்தேயு 1:1-25) என்ற காரணத்தால் பவுல், “மாம்சத்தின்படி” என்ற சொல்விளக்கத்தைப் பயன்படுத்தினார். இயேசுவின் ஆவிக்குரிய (தெய்வீக) பகுதியானது பரலோகத்தி லிருந்து வந்ததாகும் (காண்க லூக்கா 1:26-35).

அப்போஸ்தலர் இவ்விடத்தில், “கிறிஸ்துவும் அவர்களில் பிறப்பாரே” என்று கூறவில்லை, ஏனென்றால் கிறிஸ்து (இயேசு) ஏற்கனவே வந்திருந்தார். இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொண்டிராத பல யூதர்கள், மேசியா வர வேண்டும் என்று இன்னமும் ஜெபித்துக் கொண்டிருக்கின்றனர். ஜெரால்டு R. கிரேக் என்பவர், “பார்வையற்று இருத்தல் என்பது பேரிடரான விஷய மாகும், ஆனால் ஒருவர் தமது சொந்த மரபுரிமையின் முடிசூடிய மகிமை பற்றிப் பார்வையற்றிருத்தல் என்பது, வார்த்தைகள் மாத்திரம் எடுத்துரைக்க இயலாத பரிதாப நிலைமையாகும்” என்று எழுதினார்.[15]

இஸ்ரவேல் மக்கள் மீது தேவனுடைய ஆசீர்வாதங்களை, விசேஷமாக இயேசு என்ற ஆசீர்வாதத்தை பவுல் ஆழ்ந்து சிந்தித்தபோது, அவர் உணர்வு மிகுதியால் ஆட்கொள்ளப்பட்டு கர்த்தரைத் துதிக்க நின்றார்: “… கிறிஸ்துவும் … , இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென்” (ரோமர் 9:5ஆ, இ). இந்த தேவதுதி (துதியின் வார்த்தை) யானது, முதலில் கிறிஸ்துவை “சர்வத்திற்கும் மேலானவர்” என்று ஒப்புக் கொள்கிறது. இயேசு இந்த பூமியை விட்டுச் செல்வதற்குச் சற்றுமுன்னர், தமது அப்போஸ்தலர்களிடத்தில் அவர், “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” என்று கூறினார் (மத்தேயு 28:18). அவர் பரத்துக்கேறிய பின்பு, அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்தார் (மாற்கு 16:19), அங்கிருந்துகொண்டு அவர் இப்போது ஆளுகை செய்கிறார் (காண்க 1 கொரிந்தியர் 15:25).

தேவதுதியானது பின்பு, “என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்” என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது. இது அடிப்படையில், “நித்தியத் திற்கும் ஆசீர்வதிக்கப்பட்ட தேவன்” என்று அர்த்தப்படுகிறது. தொடக்ககாலக் கையெழுத்துப் பிரதிகளில் மேற்கோள் குறிகள் அரிதாயிருந்ததால், “சர்வத் திற்கும் மேலான” என்பதைத் தொடர்ந்து ஒரு கமா வரவேண்டுமா அல்லது புள்ளி வரவேண்டுமா என்பது பற்றி நாம் உறுதியாய் எதுவும் நினைக்க முடிவதில்லை. இந்தச் சொற்றொடரைத் தொடர்ந்து (NASB, KJV, NIV, மற்றும் பல மொழிபெயர்ப்புகளில் உள்ளதுபோல்) ஒரு கமா இருந்தது என்றால், “என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவன்” என்பது இயேசுவைக் குறிப்பதாக உள்ளது. இந்தச் சொற்றொடரைத் தொடர்ந்து (NCV; காண்க NEB) ஒரு புள்ளி இருந்தது என்றால், 5ம் வசனத்தின் முடிவு வார்த்தைகள் தேவனுக்கு

நடைமுறைப்படுத்தப்படுவதாக உள்ளன.

குறைந்தபட்சம் இரண்டு காரணங்களுக்காக, "என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட ... தேவன்" என்பது இயேசுவின் தெய்வீகத்துவத்தைக் குறிக்கிறது என்று நான் நம்புகிறேன். முதலாவது, தொடக்ககால கிறிஸ்தவ எழுத்தாளர்கள் இவ்வார்த்தைகளைக் கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தினர். இரண்டாவது, இந்த வாக்கியத்தில், "மாம்சத்தின்படி" என்பதை சமானப்படுத்தச் சில விஷயங்கள் தேவைப்படுகின்றன. "மாம்சத்தின்படி" இயேசு ஒரு இஸ்ரவேலராக இருந்தார்; ஆனால் "ஆவியின்படி" அவர் "என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனாக" இருக்கிறார். சர்வத்திற்கும் மேலான என்பதற்குப் பின்னால் ஒரு புள்ளி வைக்கப்பட்டாலும்கூட, பவுல் இன்னமும் குமாரனாகிய தேவனைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம்.


வால்ட்டர் W. வெஸ்ஸெல் என்பவர், ரோமர் 9:5ஐப் பற்றி, "[NIV] மொழிபெயர்ப்பு மிகச்சரியாக உள்ளதென்று யூகித்துக் கொண்ட நிலையில், [புதிய ஏற்பாடு] புத்தகம் முழுவதிலும் இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்துவம் பற்றிய மிகத்தெளிவான கூற்றுக்களில் ஒன்று" என்று அழைத்தார்.[16] மூ என்பவர், "கமா இவ்விடத்தில் இருக்கலாம் என்பதற்கு ஆதரவான, சொல்லியல் மற்றும் சந்தர்ப்பப்பொருள் ஆகிய இரண்டின் விஷயமும் சிக்கலாக உள்ளது. ஆகையால், இவ்வசனம் ... புதிய ஏற்பாட்டில் இயேசுவை 'தேவன்' என்று வெளிப்படையாக அழைக்கும் வசனங்களுடன் எண்ணப்படத் தகுதிவாய்ந்திருக்கிறது" என்று எழுதினார்.[17]

**தேவனுடைய இராஜரீகம் (வசனங்கள் 6-13)**

பவுல், யூதருக்குத் தாம் விரோதியல்ல, ஆனால் ஒரு நண்பரே என்பதை உறுதிப்படுத்தியபின்பு, "யூதத்துவப் பிரச்சனை" பற்றிய தமது கலந்துரையாடலை ஆரம்பித்தார். 6அ வசனத்தின் வார்த்தைகள், ரோமர் 9-11ன் ஆய்வுக்கருத்துக் கூற்று என்று அழைக்கப்பட்டுள்ளது: "தேவவசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது." பவுல் பின்வரும் வகையிலான மறுப்பை யூதர்களிடத்திலிருந்து முன்னெதிர்பார்த்துக் கொண்டிருந்தார்: "நீங்கள் இப்போதுதான், தேவன் நமது மக்களுடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள உடன்படிக்கைகளைப் பற்றியும் நமக்குத் தரப்பட்டுள்ள புனிதமான வாக்குத்தத்தங்கள் பற்றியும் பேசினீர்கள், இருப்பினும், உங்கள் நிருபம் முழுவதிலும், நீங்கள் ஒருவர் நீதிமானாக்கப்பட வேண்டுமென்றால், அவர் இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறீர்கள். பெரும்பான்மையான யூதர்கள், இயேசுவை மேசியா என்று நம்புவதில்லையாதலால், தேவன் நம்முடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கைகளையும் நமக்கு அளித்த வாக்குத்தத்தங்களையும் கனப்படுத்த அவரே தவறிவிட்டார் என்று நீங்கள் கூறுவதாக இருக்க வேண்டும்."

தேவனுடைய வசனம் அவமாய்ப் போயிற்று என்பதைப் பவுல் விரைவாக மறுத்தார். அது தவறிப் போகவில்லை, "இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே" என்று அவர் கூறினார் (வசனம் 6ஆ). "வம்சத்தார்" என்பது NASB வேதாகமத்தில் சாய்வெழுத்துக்களில் உள்ளது, இது இவ்வார்த்தை மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. மூல வசனத்தில், "They are not all Israel who are from [of] Israel" என்றுள்ளது (KJV வேதாகமத்தைக் காணவும்). இரண்டு வட்டங்களைப்

*பற்றி நினைத்துப் பாருங்கள்: ஒரு வட்டம் இன்னொரு பெரிய வட்டத்தினுள் இருக்கிறது.*[18] இவை இரண்டுமே "இஸ்ரவேலை" குறிக்கின்றன; ஆனால் பெரிய வட்டமானது இஸ்ரவேலின் (யாக்கோபின்) மாம்சப்பிரகாரமான சந்ததியார் எல்லாரையும் குறிக்கிறது, அதேவேளையில் சிறிய வட்டமானது "உண்மையான இஸ்ரவேலர்" என்று அழைக்கப்படக்கூடியவர்களை மாத்திரம் கொண்டுள்ளது. (இவர்களைப் பவுல், தமது கலந்துரையாடலின் பிற்பகுதியில், "மீதியாயிருப்பவர்கள்" என்று அழைத்தார் [*9:27; 11:5*].)




*சிறிய வட்டத்தில் உள்ளவர்கள் இஸ்ரவேலின் (யாக்கோபின்) மாம்சப் பிரகாரமான சந்ததியாராக இருந்தனர், ஆனால் அவர்கள் இயேசுவின்மீது விசுவாசம் கொண்டவர்களாகவும் இருந்தனர்.* 2ம் அதிகாரத்தில் பவுல், "புறம்பாக யூதனானவன் யூதனல்ல. ... உள்ளத்தில் யூதனானவனே யூதன்" என்று கூறியிருந்தார் (வசனங்கள் 28, 29அ). 2ம் அதிகாரத்தின் "உண்மையான யூதன்" மற்றும் 9ம் அதிகாரத்தின் "உண்மையான இஸ்ரவேல்" என்பவர்கள், இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்வதினால் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றியிருந்தவர்களான, யூதமக்களிலிருந்த கொஞ்சப்பேர்களுக்கான குறிப்புகளாக உள்ளன.

ரோமர் 2:28, 29 மற்றும் 9:6ஆ ஆகியவற்றில் உள்ளவை போன்ற கூற்றுக்கள், பெரும்பான்மையான யூதர்களுக்கு அதிர்ச்சியளிப்பதாக இருந்திருக்கும். அவர்கள் ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு ஆகியவர்களை முன்னோர்களாகக் கொண்டிருத்தல் மாத்திரமேகூடத் தங்கள் நித்திய இரட்சிப்பை உறுதிப்படுத்துவதாக நம்பியிருந்தனர். விஷயம் இப்படி இருக்கவில்லை என்று காண்பிக்கப், பவுல் தமது வாசகர்களுக்கு தேவன் கடந்தகாலத்தில் ஏற்படுத்தியிருந்த இரண்டு தெரிவுகளை நினைவூட்டினார்.

*(1) தேவன் ஈசாக்கைத் தேர்ந்துகொண்டார் (வசனங்கள் 7-9).* பவுல் முதலில், ஆபிரகாமின் மாம்சத்திற்குரிய சந்ததியாக இருத்தல் மாத்திரம் போதுமானதல்ல என்று நிலைநாட்டினார்; "அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; 'ஈசாக்கினிடத்தில் உன்சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே' " (9:7). ஆபிரகாம், ஆகார் என்பவளின் மகனான இஸ்மவேல் (ஆதியாகமம் 16:15) உட்படப் பல பிள்ளைகளைக் கொண்டிருந்தார் (காண்க ஆதியாகமம் 25:1, 2). இருந்தபோதிலும், அவரது பிள்ளைகளில் *ஒரே* ஒருவர்தாம், ஆபிரகாமுக்குத் தொடக்கத்தில் தரப்பட்டிருந்த வாக்குத்தத்தங்களைப் பெற்றுகொள்ளத் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டார். ரோமர் 9:7ல் உள்ள மேற்

கோள் ஆதியாகமம் 21:12ல் இருந்து வருகிறது, அங்கு ஆபிரகாமிடத்தில் தேவன், "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்" என்று கூறினார்.

தொடர்ந்து பவுல், "அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளான வர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளான வர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்'' என்று கூறினார் (ரோமர் 9:8). "மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள்'' என்பது - ஈசாக்கு மூல மாகவும் மற்றும் இஸ்மவேலின் சந்ததிகள் (அரபியர்கள்) மற்றும் கேத்தூராளின் பிள்ளைகள் (மீதியானியர் மற்றும் பிறர்) என்ற - ஆபிரகாமுடைய மாம்சப் பிரகாரமான பல சந்ததிகளைக் குறிக்கிறது. இருப்பினும், தேவன் (ஈசாக்கின் மூலம்) "வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களையே" தமது பிள்ளைகளாக, ஆபிரகாமின் உண்மையான சந்ததியார்களாக ஏற்றுக்கொண்டார்.

"வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்கள்'' என்பது, வாக்குத்தத்தத்தி லிருந்து விளைந்த பிள்ளைகளைக் குறிக்கிறது. அந்த வாக்குத்தத்தம் என்னவாக இருந்தது? பவுல், ''அந்த வாக்குத்தத்தமான வார்த்தையாவது: 'குறித்த காலத்திலே வருவேன், அப்பொழுது சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்பதே' '' என்று கூறினார் (வசனம் 9). இது ஆபிரகாம் தொண்ணூற்று ஒன்பது வயதுடையவராகவும் சாராள் தொண்ணூறு வயதுடையவளாகவும் இருந்தபோது, அவர்களுக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாக இருந்தது: "ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்" (ஆதியா கமம் 18:10). ஒரு ஆண்டிற்குப் பின்பு, தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி னார் (21:1-3), மற்றும் ஈசாக்கு பிறந்தார்.

இந்தச் சிந்தனை வரிகளுடன் பவுல் எங்கு சென்றுகொண்டிருந்தார்? தேவன், இஸ்மவேல் மற்றும் ஈசாக்கு ஆகிய இருவருக்கிடையில் ஒரு தெரிவை ஏற்படுத்தியிருந்தார் என்பதை அவர் [பவுல்] சுட்டிக்காண்பித்தபோது, தேவன் அதைச் செய்ய உரிமைகொண்டிருந்தார் என்றும் அவர் சரியான தேர்வையே மேற்கொண்டிருந்தார் என்பதையும் யூதர்கள் ஒப்புக்கொண்டிருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. பவுல் பின்வரும் முடிவிற்கு நடத்திச்சென்று கொண்டிருந்தார்: *தேவன் தேவனாக இருப்பதால் இப்படிப்பட்ட தேர்வுகளை மேற்கொள்ள உரிமைகொண்டுள்ளார், மற்றும் அவர் மேற்கொள்ளும் தேர்வுகள் எப்போதுமே சரியானவைகளாகவே உள்ளன. ஆகையால், மாம்சப்பிரகாரமான இஸ்ரவேலுக்குள், "உண்மையான இஸ்ரவேலர்" என்று கருதப்பட வேண்டியது யார் என்பதைப்பற்றி முடிவுசெய்ய அவர் உரிமை உள்ளவராக இருக்கிறார்.*

*(2) தேவன் யாக்கோபைத் தேர்ந்துகொண்டார் (வசனங்கள் 10-13).* முற்பிதாக்களின் மாம்சப்பிரகாரமான சந்ததியாக இருத்தல் மாத்திரம் போது மானதல்ல என்பதற்கு இன்னுமொரு ஆதாரமாக, பவுல் ஈசாக்கின் மகன்களென்ற ஒரு சந்ததியை நோக்கி முன்சென்றார்:

> இதுவுமல்லாமல், நம்முடைய பிதாவாகிய ஈசாக்கு என்னும் ஒருவனாலே ரெபெக்காள் கர்ப்பவதியானபோது, பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்[19]படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியை களினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு,

*மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது. அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது (ரோமர் 9:10-13).*

தேவன் தாம் விரும்புகிற யாரையும் தேர்ந்துகொள்வதற்கு இராஜரீக உரிமைகொண்டிருக்கிறார் என்பதை நிலைநாட்டப் பவுல் விரும்பினார். தேவனுக்கு நடைமுறைப்படுத்தப்படும் வகையில் "இராஜரீகம்" என்பது, வேறு எவரும் கேள்விகேட்க இயலாத வகையிலான அவருடைய முழுமையான அதிகாரத்தைக் குறிக்கிறது. முந்திய விவரிப்பை (இஸ்மவேலை விட்டு ஈசாக்கைத் தேர்ந்தெடுத்ததை)ப் பொறுத்தமட்டில், இஸ்மவேலைவிட ஈசாக்கு அதிக தேவ பக்தியுள்ளவனாக இருந்தான் என்பதால் இஸ்மவேலுக்குப் பதிலாக தேவன் ஈசாக்கைத் தெரிந்துகொண்டார் என்று விவாதிக்கப்படலாம். இந்த விவரிப்பை (ஏசாவை விட்டு யாக்கோபைத் தேர்ந்தெடுத்ததை)ப் பொறுத்தமட்டில் அந்த இரட்டையர் பிறப்பதற்கு *முன்னதாகவே* தேவனுடைய தேர்ந்துகொள்ளுதல் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. ஆகையால், சாதனை, நற்தன்மை, மற்றும் செயல்திறன் ஆகியவைகூட காரணிகளாக இருக்கவில்லை.[20] ஒருவேளை நீங்கள் இந்த வரலாற்றை நினைவில் வைத்திருக்கலாம்:[21] ரெபெக்காள் இரு குழந்தைகளைச் சுமந்து கர்ப்பிணியாக இருக்கையில், அவளிடம் தேவன், "இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும்; அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" என்று கூறினார் (ஆதியாகமம் 25:23). சற்றுக் காலத்திற்குப் பின்பு, இரட்டையர்கள் பிறந்தனர்: முதலில் ஏசாவும் பின்பு யாக்கோபும் (ஆதியாகமம் 25:24-26).

ஏசா யாக்கோபைச் சேவித்தார் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லாதிருப்பதால், ரோமர் 9:12ல் உள்ள "மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" என்ற கூற்றைப் பற்றிச் சிலர் ஆச்சரியம் அடைந்துள்ளனர். ஆதியாகமம் 33:8ஆ வசனத்தின்படி, உண்மையில் யாக்கோபுதான் ஏசாவை "ஆண்டவனே" என்று அழைத்ததன் மூலமாக, ஏசாவுக்குப் பணிவிணக்கம் காண்பித்தவராக இருந்தார். ஆதியாகமம் 25ன் முழுக்கூற்று விஷயத்தைத் தெளிவாக்குகிறது, ஏனென்றால் ரெபெக்காளுக்கு, "இரண்டு *ஜாதிகள்* உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித *ஜனங்கள்* உன் வயிற்றிலிருந்து பிரியும்; அவர்களில் ஒரு *ஜனத்தார்* மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் [அதாவது, மூத்த குழந்தையின் சந்ததிகள்] இளையவனைச் [சந்ததியினரை] சேவிப்பான்" என்று கூறப்பட்டது (வசனம் 23; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஏசாவின் சந்ததிகள் (ஏதோமியர்கள்) யாக்கோபின் சந்ததிகளை (தாவீது அரசரின்கீழிருந்த இஸ்ரவேல் மக்களை) சேவித்தனர் என்பது வரலாற்றின் விஷயமாக உள்ளது (காண்க 2 சாமுவேல் 8:14).

ஆதியாகமம் 25:23 வசனமானது ஒரு *மக்களினம்* பற்றிய முன்னுரைப்பாக இருக்கும் அளவுக்கு அது ஒரு *தனி* நபருக்குரிய முன்னுரைப்பாக இருக்கவில்லை. இந்த முடிவானது ரோமர் 9:13ல் உள்ள மேற்கோளினால் மறுவலியூட்டப்படுகிறது: " 'அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன்' என்றும் எழுதியிருக்கிறது." இந்த மேற்கோள் மல்கியா 1:2, 3ல் இருந்து


வருகிறது, அது பின்வருமாறு உள்ளது:

> "நான் உங்களைச் சிநேகித்தேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு நீங்கள்: "எங்களை எப்படிச் சிநேகித்தீர்?" என்கிறீர்கள்; கர்த்தர் சொல்லுகிறார்: "ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ?" "ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன். ஏசாவையோ நான் வெறுத்தேன்; அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன்."

கர்த்தர், ஒரு மக்களினம் என்ற வகையில் இஸ்ரவேலுடன் பேசினார், மற்றும் இதன் சந்தர்ப்பப்பொருளானது, ஏசா என்பது ஒரு மக்களினம் என்ற வகையில் ஏதோமியருக்கான குறிப்பாக இருந்தது என்பது தெளிவு (வசனம் 4ஐக் காணவும்).

"... ஏசாவையோ நான் வெறுத்தேன்" என்ற கூற்றைப் பற்றியும் சிலர் வியப்பு அடைகின்றனர். வேதவசனங்களில் "வெறுத்தல்" என்ற வார்த்தை சில வேளைகளில் "குறைவாக அன்புகூருதல்" என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகிறது (லூக்கா 14:26 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). AB வேதாகமத்தில் ரோமர் 9:13ல் "வெறுத்தேன்" என்ற வார்த்தைக்குப் பின்னால் பின்வரும் விளக்கச் சொற்றொடர் உள்ளது: "யாக்கோபு மீதான எனது உணர்வுடன் ஒப்பிடுகையில் சார்பளவில் குறைவான மதிப்புடன் வைத்தேன்." ரோமர் 9ல் பவுலின் நோக்கத்தைப் பொறுத்தமட்டில், 13ம் வசனத்திலுள்ள மேற்கோள் பின்வருமாறு பொழிப்புரை செய்யப்படலாம்: "யாக்கோபை நான் தேர்ந்துகொண்டேன், ஆனால் ஏசாவைப் புறக்கணித்தேன்."

ரோமர் 9:1-3ன் இரண்டு தெரிவுகள், *இரட்சிப்பைப்* பற்றியவைகளாயிராமல், *சேவித்தல்/ஊழியம்* பற்றியவைகளாக உள்ளன. லியோன் மோரீஸ் என்பவர், "பவுல் தமது நிருபத்தின் இந்தப் பகுதி முழுவதிலும், இஸ்ரவேல் மக்களின் தனிநபர்களையல்ல, ஆனால் இஸ்ரவேல் மக்கள்கூட்டம் முழுவதையும் முதன்மையாகத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதாகக் காணப்படுகிறது மற்றும் அவர் நித்திய இரட்சிப்பு என்பதற்கு மாறாக இவ்விடத்தில் சேவித்தல்/ஊழியம் என்பதற்குத் தேர்ந்துகொள்ளப்படுதல் பற்றியே விளக்கியுரைத்தார்" என்று எழுதினார்.[22] மீண்டுமாக மோரீஸ், "நித்திய இரட்சிப்பு அல்ல, ஆனால் சிலாக்கியத்திற்கான தேர்ந்துகொள்ளுதலே சிந்தையில் உள்ளது" என்றும் கூறினார்.[23] தேவன் தமது தெய்வீக நோக்கத்தைச் செயல்படுத்த யாரைப் பயன்படுத்துவார் என்பது பற்றி அவரே தெரிவுகளை ஏற்படுத்தினார், ஆனால் இது தேர்ந்தெடுக்கப்படாதவர்களின் நித்திய அடைவிடங்களின் விஷயத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. J. D. தாமஸ்[24] என்பவரால் போதிக்கப்பட்ட ஒரு வகுப்பிற்காக நான், ரோமர் 9:11-24ன்மீது ஒரு தேர்வு எழுதியபோது, அந்தத் தேர்வுத்தாளின் கீழே அவர், "நித்தியத்துவமானதல்ல ஆனால் உலகப்படியான தேர்ந்துகொள்ளுதல்" என்ற குறிப்பைக் கூடுதலாகச் சேர்த்தார். கால்வினீயர்கள் இவ்வசனப்பகுதியை ஒரு நிரூபண வசனப்பகுதியாக நீண்ட காலமாகப் பயன்படுத்தி வருகின்றனர் - ஆனால் இது எதைப் போதிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனரோ, அதை இது போதிப்பது இல்லை.




*நமது வேதபாட வசனப்பகுதியானது, மேசியா வர இருந்த இரத்தசம்பந்தமான சந்ததி வரிசையைத் தேவன் நிலைநாட்டுகையில், அவர் ஏற்படுத்திய இரண்டு தெரிவுகளை முன்னிறுத்தியுள்ளது. தேவன் இஸ்மவேலை விட்டு ஈசாக்கைத் தேர்ந்துகொண்டார். பின்பு, ஏசா மற்றும் யாக்கோபு விஷயத்தில், தேவன் மூத்தவனை விட்டு இளையவனைத் தேர்ந்துகொண்டார். தேவன் தேவனாக இருக்கிறார் என்பதால், இந்தத் தெரிவுகளை ஏற்படுத்த அவர் உரிமை உள்ளவராக இருக்கிறார் என்று பவுல் சுட்டிக்காண்பித்தார். அவர் இராஜரீகமுள்ளவராக இருக்கிறார் மற்றும் மேலான அதிகாரம் கொண்டிருக்கிறார். அதைக்குறித்து எந்த யூதனும் விவாதம் செய்ய மாட்டார். பவுல் - யூதர்களுக்கு - ஏற்படுத்திய நடைமுறை பயன்பாடுதான் யூதர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிற்று! தேவன் ஈசாக்கைத் தேர்ந்துகொள்வதற்கும் இஸ்மவேலைப் புறக்கணிப்பதற்கும் உரிமை கொண்டிருந்தார் என்றால், அவர் யாக்கோபைத் தேர்ந்துகொள்வதற்கும் ஏசாவைப் புறக்கணிப்பதற்கும் உரிமை கொண்டிருந்தார் என்றால், அவர் இஸ்ரவேலர்களில் சிலரைத் தேர்ந்துகொள்வதற்கும் மற்றவர்களைப் புறக்கணிப்பதற்கும் உரிமை கொண்டிருந்தாரே.* தேவனுடைய இராஜரீகத்துவம் பற்றிய உபதேசமானது இரு திசைகளிலும் வெட்டக்கூடியதான இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போன்றதாக இருந்தது.

## முக்கியமான சத்தியங்கள் (9:1-13)

நாம் 9:14-29ன் மீதான நமது அடுத்த பாடத்தில், பவுலின் சிந்தனை வரியைத் திரும்பவும் தொடருவோம். [இப்பாடத்தை] நாம் முடிப்பதற்கு முன்னர், முதல் நூற்றாண்டுப் பிரச்சனை மீதான அவரது போதனையில் இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான எந்த சத்தியங்கள் உள்ளன என்று காண்பதற்கு நாம் அவரது போதனையை ஆய்வுசெய்வது அவசியமாக உள்ளது.[25]

**இழந்துபோகப்பட்டவர்கள் குறித்து அக்கறையாயிருங்கள் (வசனங்கள் 1-3).**

யூதர்களை வெறுப்பதற்குப் பவுல் காரணம் ஒவ்வொன்றையும் கொண்டிருந்தார். அவர்களால் அவர் ஏறக்குறையத் தாம் சென்றிருந்த பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் நிந்திக்கப்பட்டிருந்தார். இருந்தபோதிலும், அவர்கள்

இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், ரோமர் 8ல் விவரித்து உரைக்கப் பட்ட ஆச்சரியமான ஆசீர்வாதங்களை அவர்கள் ஒருக்காலும் மகிழ்வுடன் அனுபவிக்க மாட்டார்கள் என்பதை நினைத்து பார்த்தல் அவரது இருத யத்தை உடையச் செய்தது. நாம் கற்பனை செய்யக்கூடியதிலேயே மிகவும் பயங்கரமான அனுபவங்களின்கீழ், பவுல் கடந்து சென்றிருந்தாலும், இழந்து போகப்பட்டவர்களைப் பற்றி நினைக்கையில் அவர் செய்தது போன்று பெரு வருத்தத்தின் ஆழத்தை அவர் வேறு எவ்விடத்திலும் வெளிப்படுத்திய தில்லை. கர்த்தரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்தாலன்றி, நித்தியத்திற்கும் இழந்துபோகப்படக்கூடிய மக்களால் நீங்களும் நானும் சூழப்பட்டிருக்கிறோம். அவர்களில் சிலர் ''மாம்சத்தின்படி நமது உறவினர்களாக'' இருக்கலாம். நாமும்கூட அவர்களுக்காக நமது இருதயத்தில் "மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும்" கொண்டிருத்தல் அவசியமாயிருக்கிறது.

**நல்ல விஷயங்கள் சிலவற்றைக் கூறுங்கள் (வசனங்கள் 4, 5).**

பவுல் எழுதிய நிருபங்களின் ஆரம்ப வசனங்களை ஆய்வுசெய்யுங்கள், அங்கு அவர் வழக்கமாகத் தமது வாசகர்களின் பிரச்சனைகளைக் கையாளுவதற்கு முன்னதாக, அவர்களைப் பற்றிய நல்ல விஷயங்கள் சிலவற்றைக் கூறுதலை வழக்கமாகக் கொண்டிருந்தார். இளம் பிரசங்கியார்கள் (மற்றும் முதிர்வயது டையோர்) பவுலின் உதாரணத்திலிருந்து கற்றுக்கொள்ள முடியும். நாம் யாவரும், மற்றவர்களுடனான நமது உறவுகளில் நேர்மறைகளைக் கண்ணோக்க வேண்டும்.

**வாய்ப்புக்கள் வீணாக்கப்படக் கூடும் (வசனங்கள் 4, 5).**

யூதர்களுக்குக் கர்த்தரால் பல விசேஷித்த சிலாக்கியங்கள் தரப்பட்டிருந்தன, ஆனால் அவர்கள் அனுகூலப்படுத்திக் கொள்ளாதிருந்தனர். அவர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களை வீணாக்கினர், மற்றும் வீணாக்கப்பட்ட ஒரு வாய்ப்பு என்றென்றைக்கும் கடந்து சென்றதாகிவிடுகிறது. எபேசியர் 5:16ல் பவுல் எல்லாக் கிறிஸ்தவர்களும் "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை [ஒவ்வொரு வாய்ப்பையும் பெற்று] பிரயோஜனப்படுத்திக்கொள்ள" வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார். தேவன் நமக்குக் கொடுத்துள்ள வாய்ப்புக்கள் யாவற்றையும்,[26] விசேஷமாக, ஆவிக்குரிய வாய்ப்புக்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவற்றை நாம் வீணாக்கினால், அது எவ்வளவு பரிதாபகரமானதாயிருக்கும்!

**இரட்சிப்பு தனிப்பட்டதாக உள்ளது (வசனங்கள் 6ஆ, 7அ).**

யூதர்கள், தாங்கள் மாம்சப்பிரகாரமாக ஆபிரகாமின் சந்ததியாராக இருந்ததால் மாத்திரமேகூட இரட்சிக்கப்படுவோம் என்று நினைத்திருந்தனர், ஆனால் விஷயம் அப்படியிருக்கவில்லை. ஒருமுறை இயேசு யூதர்களிடத்தில், "ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லதொடங்கா திருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே, 'ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்' என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (லூக்கா 3:8). இன்றைய நாட்களில், சிலர் தேவபக்தியுள்ள கிறிஸ்தவப் பெற்றோர்களைக் கொண்டிருத்தல் என்பது தங்களைக் கிறிஸ்தவர்களாக்குகிறது

என்று நினைப்பவர்களாகக் காணப்படுகின்றனர். அது அப்படி இருப்பதில்லை. நீங்கள் பெற்றோர்களிடமிருந்தோ அல்லது தாத்தா பாட்டியிடமிருந்தோ இரட்சிப்பைச் சுதந்தரிக்க இயலாது. அது தனிப்பட்ட விஷயமாக உள்ளது. நீங்கள் கர்த்தரைத் *தனிப்பட்ட வகையில்* ஏற்றுக்கொண்டு அவரது சித்தத்தைச் செய்ய வேண்டும் (யோவான் 8:24; லூக்கா 13:3; மாற்கு 16:16).

**தேவன் தேவனாக இருக்கிறார் (வசனங்கள் 11, 12).**

தேவன் தேவனாயிருக்கிறார் மற்றும் - அவர் தேவனாக இருப்பதாலேயே - அவர் தமக்குப் பிரியமான எதையும் செய்யக்கூடும்[27] என்பது, ரோமர் 9ல் காணப்படும் மிகமுக்கியமான சத்தியமாக இருக்கலாம். "இராஜரீகம்" என்பது தேவனுடைய இந்தப் பண்பிற்கான இறையியல் சொற்றொடராக உள்ளது. நம்மில் சிலர் மனிதகுலத்தின் சுயாதீன சித்தம் பற்றிப் போதிக்க அதிக நேரத்தைச் செலவிட்டு, தேவனுடைய இராஜரீகத்தைப் பற்றிப் போதிக்கச் சிறிதளவு நேரமே செலவிடுபவர்களாக இருக்கிறோம். ஏசாவும் யாக்கோபும் பிறக்கும் முன்பே, ஏசாவைத் தவிர்த்துவிட்டு யாக்கோபைத் தேவன் தேர்ந்துகொண்டதில், தேவன் எதிர்காலத்திற்குள் கண்ணோக்க முடியும் என்றும், தேவனுடைய நோக்கங்களைப் பொறுத்தமட்டில், யாக்கோபு ஏசாவைக் காட்டிலும் மேன்மை யானவராக இருப்பார் என்று தேவன் அறிந்திருந்தார் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படலாம். அது உண்மையாக இருக்கலாம், ஆனால் யாக்கோபுவோ அல்லது ஏசாவோ, பிறந்தபின்பு அவர்கள் செய்த ஏதொன்றும், ஒருவரைத் தவிர்த்துவிட்டு இன்னொருவரைத் தேவன் தெரிந்துகொள்ளும்படி செய்ய வில்லை என்பதே பவுலின் கருத்தாக இருந்தது. தேவன் தேவனாக இருக்கிறார், அப்படிப்பட்டவர் எவரொருவருக்கும் கடப்பாடு உடையவராக இருப்ப தில்லை! நாம் அவரை தேவன் என்ற வகையில் கனப்படுத்தக் கற்றுக்கொள் வோமாக.

***நாம் ஒருக்காலும் அறிய முடியாத பல விஷயங்கள் உள்ளன.***

வேறெதுவும் இல்லையென்றாலும், ரோமர் 9 முதல் 11 வரையிலான அதிகா ரங்கள் போன்ற, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் கடினமான வசனப்பகுதிகள், தேவனைப் பற்றியும் அவரது நோக்கங்களைப் பற்றியும் நாம் ஒருக்காலும் அறிய முடியாத பல விஷயங்கள் உள்ளன என்ற மன ஈர்ப்பை நம்மிடத்தில் ஏற்படுத்த வேண்டும். நம்மில் சிலர் தேவனைப் பற்றி அறிய வேண்டிய ஒவ்வொன்றையும் அறிய விரும்புவர்களாக இருக்கலாம். நாம் அவை யாவற்றையும் எழுதி, அதை ஒரு பெட்டியில் இட்டு, அதன்மீது ஒரு அழகிய ரிப்பன் துணியைக் கட்டி வைக்க விரும்பலாம் - ஆனால் தேவன் ஒரு பெட்டிக்குள் பொருந்த மாட்டார். மோசே, "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமா ணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" என்று எழுதினார் (உபாகமம் 29:29). தேவன் *சில* விஷயங்களை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதற்காக நாம் அவருக்கு நன்றிநிறைந்தவர்களாக இருப்போமாக. அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளவற்றை நாம் படித்து அவற்றிற்குக் கீழ்ப்படிவோ மாக - ஆனால் அவர் *எல்லா* விஷயங்களையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை

என்பதையும் நாம் புரிந்துகொள்வோமாக. ரோமருக்கு எழுதிய நிருபமானது நம்மைத் தாழ்மையுள்ளவர்களாகக் காத்துக்கொள்ள வேண்டும்.

**தேவன் தமது வாக்குத்தத்தங்களைக் காத்துக்கொள்வார் (வசனம் 6அ).**

ரோமர் 9-11ல், பவுல் முதல் நூற்றாண்டுப் பிரச்சனையொன்றைக் குறிப்பிட்டார் என்று நான் பலமுறை குறிப்பிட்டேன். இந்தப் பிரச்சனை விளக்கப்படுத்தப்படக்கூடிய ஒரு வழி பின்வருமாறு: "யூத மக்களினத்திற்குத் தேவன் ஏற்படுத்திய வாக்குத்தத்தங்களை அவர் காத்துக்கொள்வாரா?" அந்தக் கேள்வி முதல் நூற்றாண்டுடன் பிணைக்கப்படலாம், ஆனால் அது இருபத்தியோராம் நூற்றாண்டிற்குத் தீவிரமான மறைமுகக் கருத்துக்களைக் கொண்டுள்ளது: தேவன் *நமக்கு* ஏற்படுத்தியுள்ள வாக்குத்தத்தங்களைக் காத்துக்கொள்வாரா? இதைத் தொடர்ந்து வரும் அடுத்த பாடத்தில், இந்தக் கேள்வியுடன் பவுல் தொடர்ந்து போராடியதை நாம் காண்போம், ஆனால் அவரது முடிவு நமது வேதபாட வசனப்பகுதியின் 6ம் வசனத்தில் ஏற்கனவே உரைக்கப்பட்டுவிட்டது: "தேவவசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக் கூடாது." நன்கு கவனியுங்கள்: நமக்குத் தேவனுடைய வார்த்தை அவமாய்ப் *போகாது!* தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களைக் காத்துக்*கொள்வார்.* இது உங்கள் வாழ்வின் அடித்தளமாயிருக்கக்கூடிய ஒரு சத்தியமாக உள்ளது.

## முடிவுரை

நமது அடுத்த பாடம் ரோமர் 9:14 உடன் தொடங்கும். சற்றுமுன் உரைக்கப்பட்ட சத்தியங்கள் தொடர்பாகச் சில புத்திமதிகளுடன் இந்தப் பாடத்தை முடிக்க என்னை அனுமதியுங்கள். முதலாவது, நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லாதிருந்தால், இரட்சிப்பு தனிப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உங்களுக்காக வேறு எவரும் விசுவாசிக்கவோ அல்லது மனந்திரும்பவோ அல்லது ஞானஸ்நானம் பெறவோ முடியாது. நீங்கள் உங்கள் வாழ்வைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்காதிருந்தால், தயவுசெய்து அதை இன்றே செய்யுங்கள். இரண்டாவது, நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்து, ஆனால் கர்த்தர் அளித்துள்ள ஆவிக்குரிய வாய்ப்புகளை அனுகூலப்படுத்திக் கொள்ளாதிருந்தால், மனந்திரும்பி மேன்மையானவற்றைச் செய்யத் தீர்மானிக்கும்படி உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9). உங்கள் கடந்த காலத்தைக் குறித்துச் சிலவற்றை நீங்கள் சீர்திருத்த வேண்டியிருந்தால் (காண்க யாக்கோபு 5:16), அதைச் செய்வதற்கு இதுவே வேளையாக உள்ளது (2 கொரிந்தியர் 6:2).

---

குறிப்புகள்

[1]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 5. [2]Quoted in John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 261. நீங்கள் வாழும் பகுதியில் முள்ளம் பன்றி என்பது பொதுவாக அறியப்படாததாக இருந்தால், கூர்மையான முட்கள் கொண்டுள்ள வேறொரு மிருகத்தின் பெயரை இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்துங்கள்.

அமெரிக்க நாட்டில் நாங்கள் பெரும்பாலும் "porcupine" என்று கூறுவோம். [3]Ibid. [4]இதை ரோமர் 2:15ல் உள்ள கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். *ரோமருக்கு எழுதிய நிருபம், 1* என்ற புத்தகத்தில், "புறஜாதிகள், மனச்சாட்சி, மற்றும் ஊழியப்பணி (2:14, 15)" என்ற பாடத்தில் மனச்சாட்சி மீதான விளக்கங்களைக் காணவும். [5]"பரிசுத்த ஆவிக்குள்" என்பது, பவுல் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டிருந்தார் என்ற உண்மையின் உறுதிப்பாடாகவும் இருக்கலாம். [6]J. Behm, *"anáthema,"* in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 57. [7]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 292. சில கல்வியாளர்கள், ரோமர் 9:3ல் உள்ள *anathema* என்பதற்கு இதைவிடச் சற்றே கடுமை குறைவான விளக்கத்தைக் குறிப்பிடுகின்றனர், ஆனால் பெரும்பான்மையானவர்கள், இவ்வசனத்தில் இந்த வார்த்தையானது நித்தியத் திற்கும் இழந்துபோகப்படுதலை உள்ளடக்குகிறது என்று நம்புகின்றனர். [8]உங்கள் உரையைக் கேட்பவர்கள் யாத்திராகமம் 32ம் அதிகாரத்திலுள்ள வரலாற்றிற்குப் பழக்கமற்றிருந்தால், நீங்கள் அவர்களுக்காக அதை மறுகண்ணோட்டமிட விரும்பலாம். [9]தேவன் மோசேயினிடத்தில், "பாவம் செய்தவன் எவனோ" அவனே பொறுப்பாளி யாக வேண்டும் என்று கூறினார் (யாத்திராகமம் 32:33). [10]இந்தக் குறிப்பு எனது NASB வேதாகமத்தில் காணப்படுகிறது.

[11]Walter W. Wessel, notes on Romans, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1719. [12]*ரோமருக்கு எழுதிய நிருபம், 2* என்ற புத்தகத்தில் "மகன் என்ற உரிமையின் ஆசீர்வாதம் (8:14-17)" என்ற பாடத்தில் புத்திரசுவிகாரம் என்பதன்மீதான விளக்கங்களைக் காணவும். [13]பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் "உடன்படிக்கை" (ஒருமை) என்று மாத்திரம் உள்ளது. பவுல் ஒரே ஒரு உடன்படிக்கையைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்றால், அது சீனாய் மலையில் தேவன் யூதர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒன்றாகவே இருந்தது எனலாம் (காண்க யாத்திராகமம் 24:8). [14]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 563. நாம், *latreia* என்ற வார்த்தையைப் பற்றி அதன் சந்தர்ப்பப்பொருளில் 12ம் அதிகாரத்தில் அதிக மாய்க் கற்றுக்கொள்வோம். [15]Gerald R. Cragg, "The Epistle to the Romans," in *The Interpreter's Bible* (Nashville: Abingdon Press, 1954), 9:540. [16]Wessel, 1719. [17]Moo, 294. [18]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 147. [19]"தேர்ந்துகொள்ளுதல்" என்பது *eklektos* என்ற வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, இதில் இருந்துதான் நாம் "election" என்ற வார்த்தையைப் பெறுகிறோம் (KJV வேதாகமத்தைக் காணவும்). கால்வினீய இறையியலாளர்கள் "election" என்ற வார்த்தையைத் தழுவியமைத்து அதைத் தங்கள் இறையியலில் ஒரு திறவுகோல் வார்த்தையாக ஏற்படுத்தினர். "Election" என்ற வார்த்தையைப் புரிந்துகொள்வதற்கு, அவ்வார்த்தையின் முன்பு ஒரு "s"ஐச் சேர்த்து "selection" பற்றி நினைத்துப் பார்த்தல் மிக எளிமையான வழியாக உள்ளது. *ரோமருக்கு எழுதிய நிருபம், 2* என்ற புத்தகத்தில் "ஒரே பதிலைக் கொண்ட மூன்று கேள்விகள் (8:31-37)" என்ற பாடத்தில் "elect" ["தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்"] என்பதன்மீதான விளக்கங்களைக் காணவும். [20]தேவன், ஏசாவை விட்டு யாக்கோபைத் தேர்ந்துகொண்டது பற்றி இந்தத் தகவல், KJV வேதாகமத்தில் அடைப்புக் குறிகளுக்குள் காணப்படுகிறது.

[21]பவுல் குறிப்பிட்ட பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் போலவே, இந்த நிகழ்ச்சிக்குப் பழக்கம் இல்லாது உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நீங்கள் இந்த வரலாற்றைப் பற்றிய சுருக்கமான மீள்கண்ணோட்டத்தைக் கொடுக்க விரும்பலாம்.

[22]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 352. [23]Ibid., 356. [24]David Roper, "Romans 9:11-24," a paper submitted on November 29 for J. D. Thomas, *Romans,* Abilene Christian College (1955). *[25]இந்தப் பகுதி வேண்டுமென்றே குறுகலாக்கப்பட்டுள்ளது. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு மிகவும் அவசியமான நடைமுறைப் பயன்பாடுகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை விரிவாக்குங்கள். [26]வாய்ப்புக்கள் என்பவை இடத்தைப் பொறுத்து மற்றும் தனிநபர்களைப் பொறுத்தும்கூட மாறுபடும். இதை உங்களால் இயன்ற அளவுக்கு தனிப்பட்டதாகச் செய்யுங்கள். [27]பெரும்பான்மையான பொதுவான கூற்றுக்கள் போலவே, இதற்கும் சில தகுதி தேவைப்படுகிறது: தேவனுடைய சித்தத்திற்கும் அவரது பண்பிற்கும் சீர்பொருத்த மானதாக இருக்கும்வரையில் அவர் விரும்புகிற எதையும் அவரால் செய்ய முடியும். அந்தத் தகுதியைக் குறிப்பிடுவதற்காக உங்கள் சிந்தனை ஓட்டத்தை நீங்கள் முறிக்க வேண்டுமா இல்லையா என்பது பற்றி உங்கள் சொந்த முடிவை மேற்கொள்ளுங்கள்.*

---

## ரோமருக்கு எழுதிய நிருபத்தின் வரைகுறிப்பு

*அறிமுகம் (1:1-17)*

- I. *போதனைப்பகுதி (1:18-8:39)*
  - A. *ஆக்கினைத்தீர்ப்பு (1:18-3:20)*
    - *1. புறஜாதியாருக்கு*
    - *2. யூதருக்கு*
  - B. *நீதிமானாக்கப்படுதல் (3:21-5:21)*
  - C. *பரிசுத்தமாக்கப்படுதல் (6:1-7:25)*
  - D. *மகிமைப்படுத்தப்படுதல் (8:1-39)*

- II. *நடைமுறைப்பகுதி (9:1-15:13)*
  - A. *விளக்கம் (9:1-11:36)*
    - *1. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற கருத்து, இஸ்ரவேல் மக்களுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங்களுடன் ஒப்புரவாக்கப்படுதல்*
    - *2. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற கருத்து, தேவனுடைய உண்மைத் தன்மையுடன் ஒப்புரவாக்கப்படுதல்*
  - B. *நடைமுறை (12:1-15:13)*

*முடிவுரை (15:14-16:27)*